ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1758/34 - 2012 මැයි මස 18 වැනි සිකුරාදා - 2012.05.18

*1758/34 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.- பீ. 9/2011.*

**1963 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச் சட்டம்**

72 ஆம் பிரிவின் கீழான கட்டளை

*அரசியலமைப்பின் 44 ஆம் உறுப்புரையின் (2) ஆம் பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்படுவதும் காலத்துக்காலம் திருத்தப்பட்டவாறானதுமான 1963 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 71 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 72 ஆம் பிரிவால் எனக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு சனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், இதற்கான அட்டவணையில் விவரிக்கப்படும் ஆதனத்தை இரண்டாயிரத்து பன்னிரண்டாம் ஆண்டு மே மாதம் 18 ஆந் திகதி முதல் 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, மக்கள் வங்கிச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட மக்கள் வங்கிக்கு இக்கட்டளையின் மூலம் உரித்தாக்குகின்றேன்.*

மஹிந்த ராஜபக்ஷ,
சனாதிபதி.

சனாதிபதிச் செயலகம்,
கொழும்பு 01,
2012, மே 18.

**அட்டவணை**

*சப்பிரகமுவ மாகாணம், கேகாலை மாவட்டம், கலபட கோறாளை, கலபட பற்றுவிலுள்ள மோதரதென்னயில் அமைந்துள்ளதும் "விசிங்கே வத்த" எனவும் அடுத்துள்ள "விசிங்கேஹேன"யின் தென் பகுதி எனவும், "விசிங்கே கெதரகாவவத்த", "விசிங்கே வத்த" அல்லது அடுத்துள்ள காணி எனவும் "விசிங்கேகெதரகாவ வத்த", "புலிகுராலலாகே வத்த", "பள்ளகேவத்த" எனவும் அழைக்கப்படுவனவுமான ஒன்றிணைக்கப்பட்ட காணிகளின் பிரிக்கப்படாத பாகம் முழுவதும் அதன்கண் அமைந்துள்ள அனைத்தையும் சேர்த்து, இதற்கு எல்லைகளாக வடக்கில் உக்குபண்டாவுக்குரிய காணியையும் மேற்படி காணியையும் பிரிக்கும் ஆமணக்கு வேலி மற்றும் பள்ளேஹேன தொட்டில்ல கஹா ; கிழக்கில் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எம். கீற் தயாரித்த 1917.07.03 ஆந் திகதிய நில அளவை வரைபடத்தில் துண்டு இல. 1 என அடையாளமிடப்பட்ட காணியைப் பிரிக்கும் கல்ஹிரிய ; தெற்கில் மஹாஓய நீரோடை ; மேற்கில் மோதர தென்ன நெல் வயல் மற்றும் அகழி என்பன அமைந்துள்ளன. இதன் பரப்பளவு 9 ஏக்கர் 3 றூட் 14 பேர்ச்சஸ் (9ஏ. 3றூ. 14 பே.) 1 ஏக்கர் பரப்பளவுகொண்ட மேற்படி பிரிக்கப்படாத பகுதி கேகாலை மாவட்டக் காணிப்பதிவகத்தில் உரித்து சீ 581/279 என்பதன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.*

*6 - 449/1*

*ச.வ.- பீ. 9/2011.*

***1963 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச் சட்டம்***

*72 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*அரசியலமைப்பின் 44 ஆம் உறுப்புரையின் (2) ஆம் பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்படுவதும் காலத்துக்காலம் திருத்தப்பட்டவாறானதுமான 1963 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 71 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 72 ஆம் பிரிவால் எனக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு சனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், இதற்கான அட்டவணையில் விவரிக்கப்படும் ஆதனத்தை இரண்டாயிரத்து பன்னிரண்டாம் ஆண்டு மே மாதம் 18 ஆந் திகதி முதல் 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, மக்கள் வங்கிச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட மக்கள் வங்கிக்கு இக்கட்டளையின் மூலம் உரித்தாக்குகின்றேன்.*

*மஹிந்த ராஜபக்ஷ,*
*சனாதிபதி.*

*சனாதிபதி செயலகம்,*
*கொழும்பு 01,*
*2012, மே 18.*

***அட்டவணை***

*1. கிழக்கு மாகாணம், திருகோணமலை மாவட்டம், திருகோணமலை நகர் 3 ஆம் வட்டாரத்தில் அமைந்துள்ளதும் திருகோணமலை டையிக் வீதி, 326 ஆம் வரிமதிப்பீட்டிலக்கம் கொண்டதுமான ஒரு காணித்துண்டு முழுவதும் அதன்கண் அமைந்துள்ள தென்னை மரங்களையும் ஏனைய பயிர்ச் செய்கைகளையும் அதனைச் சார்ந்த ஏனைய அனைத்து உரிமைகளையும் சேர்த்து இதற்கு எல்லைகளாக கிழக்கில் கடற்கரை ; தெற்கில் இளங்குநாதன் முருகப்பரின் காணியும் வீடும் ; மேற்கில் வீதி ; வடக்கில் காலம் சென்ற சிற்றம்பலம் நல்லதம்பியின் வீடும் வளவுகளும் அமைந்துள்ளன. மேற்படி காணி இப்பொழுது உத்தரவுபெற்ற நில அளவையாளரும் மட்டமாக்குநருமான ஆர். முருகுப்பிள்ளை தயாரித்த 1963, யூலை 14 ஆந் திகதி கொண்ட 626 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு ஏ எனக் காட்டப்பட்டுள்ளதுடன் பத்து தசம் இரண்டு ஐந்து பேர்ச்சஸ் பரப்பளவும் கொண்டது (0ஏ. 0றூ. 10.25 பே.). மேற்படி வரைபடத்தின்படி இதற்கு எல்லைகளாக வடக்கில் திருமதி ஆர். சபாரத்தினத்தின் ஆதனம் ; கிழக்கில் கடற்கரை; தெற்கில் எஸ். நடராஜாவின் ஆதனம் ; மேற்கில் டையிக் வீதி என்பன அமைந்துள்ளன. இது திருகோணமலை மாவட்ட காணிப்பதிவகத்தில் பக்கம் ஏ 38/169 என்பதில் பதிவு செய்யப்பட்டுள்ளது.*

*2. மத்திய மாகாணம் கண்டி மாவட்டம், கண்டி மாநகர சபை எல்லைகளுக்குட்பட்ட கண்டி திருகோணமலை வீதியில் அமைந்துள்ளதும் கண்டி மா. நீ. வழக்கு இல. பி/1530 என்பதில் அணைக்கப்பட்ட வரைபடத்தில் துண்டு 2 என அடையாளமிடப்பட்டதுமான பிரித்து நிர்ணயிக்கப்பட்ட தென் மேற்குப் பகுதியாகிய காணித்துண்டு முழுவதும் அதன்கண் அமைந்துள்ள 273, 273ஏ, 273பீ மற்றும் 273சீ என்னும் வரிமதிப்பீட்டிலக்கங்களையும் தற்பொழுது 245, 245/1, 245/2 மற்றும் 245/3 என்னும் வரிமதிப்பீட்டிலக்கங்கள் கொண்ட கட்டிடங்களுடன் சேர்த்து, பிரித்து நிர்ணயிக்கப்பட்ட மேற்படி தென் மேற்குப் பகுதியின் பரப்பளவு நாலு தசம் ஏழு பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 4.7பே.). இதற்கு எல்லைகளாக வடகிழக்கில் இக்காணியின் எஞ்சிய பாகமாகிய துண்டு 1 ; தென் கிழக்கில் வள்ளியம்மாவினதும் இப்பொழுது எம். சீ. ஏ. ரஹிமினதும் ஆதனம் ; தென் மேற்கில் அஸ்கிரிய விஹாரயின் ஆதனம் ; வடமேற்கில் பிக்குட்டி லெப்பை சின்னதம்பிக்குரியதும் தற்பொழுது மாநகர சபையால் உரிமைகோரப்படுவதுமான ஆதனம், பிரதான வீதியிலிருந்து துண்டு 1 இன் வடமேற்கு எல்லை வழியாக தற்போதுள்ள மூன்றடி அகலமான அணுகுபாதை மீதான வழியுரிமையையும் அதன்மீது தற்பொழுது நிர்மாணிக்கப்படும் புதிய கட்டிடத்தையும் சேர்த்து.*

*மேற்படி துண்டு 2 எட்டு பேர்ச்சஸ் பரப்பளவு கொண்ட (0ஏ. 0றூ. 8பே.) காணியிலிருந்து பிரித்து நிர்ணயிக்கப்பட்ட ஒரு பகுதியாகும். இது பக்கம் ஏ 91/116 என்பதில் பதிவு செய்யப்பட்டுள்ளது.*

*6 - 449/2*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.